# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
## OS.No. 70/2013
## வழக்கு சாட்சி PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செல்லத்துரை** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : முத்து | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : அட்டுவம்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 55/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 24.04.2026 |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன் . வாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. எனது தந்தை முத்து பெயரில் வழங்கப்பட்ட பட்டா (தீர்வை) அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. எனது தந்தை முத்து பெயரில் உள்ள நில உடைமை குறிப்பேடு அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 22.08.2008 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. தாவா சொத்து தொடர்பாக எனது பெயரில் உள்ள கணினி பட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. தாவா சொத்து தொடர்பாக எனது பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி இரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. எனது தந்தை முத்து, எனக்கு 02.04.2013 ல் அனுப்பிய கடிதம் அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. தாவா சொத்து தொடர்புடைய வில்லங்கச்சான்று அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. 01.04.2013 தேதியிட்ட தானசெட்டில்மென்ட் இரத்து பத்திரம் இணையவழி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. அசல் வழக்கு எண்.262/2013 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10. அசல் வழக்கு எண் .262/2013 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

11. அசல் வழக்கு எண் .133/2014 வழக்கின் தீர்ப்புரை நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

**(தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்)**

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.04.24 11:21:45 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.